# In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

அ.வ.எண். 128/2015 தேதி-09.07.2025

(P.W.1) - ஜார்ஜ் செல்வமணி

**குறுக்கு விசாரணை**

வழக்கின் எ பட்டிகை சொத்து யாருடையது என்றால் மைக்கேல் உடையது. அவர் பாதை அவகாசத்துடன் எனக்கு விலைக்கு கொடுத்தார். அதன் சர்வே எண் 369/10 ஆகும். பி பட்டிகை சொத்து எந்த சர்வே எண்ணில் வரும் என்றால் 369/8 பி ஆகும். பி பட்டிகை சொத்து யாருடைய பெயரில் உள்ளது என்றால் மேற்படி மைக்கேல் என்பவர் பெயரில் உள்ளது. பிரதிவாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது மனைவியின் சகோதரர். அவர் என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் டைல்ஸ் கடை வைத்து தொழில் செய்து வருகிறார்.

வழக்கு எ பட்டிகை சொத்து எங்கிருக்கிறது என்றால் அழகியமண்டபம் என்ற இடத்தில் திருவனந்தபுரத்திலிருந்து நாகர்கோவில் செல்லும் சாலையின் தெற்கு பக்கம் உள்ளது. திருவனந்தபுரத்திலிருந்து நாகர்கோவில் செல்லும் சாலை NH 47 ஆகும். பி பட்டிகை சொத்து எ பட்டிகை சொத்தின் எந்த பக்கம் இருக்கிறது என்றால் வடக்கு பக்கம் இருக்கிறது.

எனக்கு பாதை அவகாசமாக கொடுத்த சொத்து பி பட்டிகை சொத்தில் உள்ளதாகும். வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி பி பட்டிகையில் பாதை அவகாசம் மட்டும் எனக்கு எழுதி கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். எ பட்டிகை சொத்தில் எனது வீடு இருக்கிறது என்றால் சரிதான். NH 47 பி பட்டிகை சொத்தின் எந்த பக்கம் இருக்கிறது என்றால் வடக்கு பக்கம் இருக்கிறது. பி பட்டிகை சொத்திற்கும் NH 47 சொத்திற்கும் இடையில் 1 சென்ட் சொத்து இருக்கிறது என்றால் சரிதான்.

பி பட்டிகை சொத்தைப்பொறுத்து எனக்கு பட்டாவோ, கரத்தீர்வை ரசீதோ கிடையாது என்றால் சரிதான். போக்குவரத்து அவகாசம் தவிர வேறு எதுவும் கிடையாது. பிரதிவாதி மேற்படி 1 சென்ட் சொத்தை போக்குவரத்து வசதிக்காகத்தான் வாங்கினார் என்றால் எனக்கும் அவருக்கும் சேர்ந்து பாதை அவகாசத்திற்காக வாங்கினார். அந்த ஆவணத்தை நான் படித்துப்பார்த்துள்ளேனா என்றால் படிக்கவில்லை. அந்த ஆவணத்தில் எனக்கும் பிரதிவாதிக்கும் சேர்ந்து பாதை அவகாசம் இருப்பதாக எழுதப்படவில்லை என்றால் நான் அந்த ஆவணத்தைப் பார்க்கவில்லை.

பிரதிவாதிக்கு டைல்ஸ் கடை எந்த பக்கமுள்ளது என்றால் ரோட்டின் தெற்கு பக்கம் உள்ளது. தெற்கு பக்கம் என்பது பி பட்டிகை சொத்தின் வடக்கு பக்கமிருக்கும் 1 சென்டின் தெற்கு பக்கம் என்றால் சரிதான். கனரக வாகனம், மிக கனரக வாகனம் மேற்படி டைல்ஸ் கடைக்கு வந்து திரும்புவதற்காக 1 சென்ட் சொத்து உபயோகப்படுத்தப்படுகிறது என்றால் சரிதான். பி பட்டிகை சொத்தின் தெற்கு பக்கம் டைல்ஸ் கடை இருந்தது தற்போது இல்லை. டைல்ஸ் கடைக்கு பொருட்கள் ஏற்றி செல்வதற்கும், திரும்புவதற்கும் ஏதுவாக அந்த 1 சென்ட் இருந்தது என்றால் அப்போது இருந்தது. இப்போது அங்கு டைல்ஸ் கடை எதுவும் இல்லை.

தற்போதும் இதற்கும் முன்பும் அங்கு டைல்ஸ் கடை இருந்தது. நான் வழக்கிற்காக பொய்யாக அங்கு டைல்ஸ் கடை இல்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1 சென்ட் சொத்தின் சர்வே எண் 369/8 பி ஆகும். பி பட்டிகை சொத்திற்கும் 1 சென்ட் சொத்திற்கும் ஒரே சர் வே எண்தான் இருக்கிறது. பி பட்டிகை சொத்தின் வடக்கு பக்கமிருக்கும் 1 சென்ட் சொத்தின் எல்கை என்ன என்றால் வடக்கு பக்கம் ரோடு, கிழக்கு பக்கம் மனோ என்பவருடைய சொத்து, மேற்கு பக்கம் வில்சன் என்பவரின் சொத்து, தெற்கு பக்கம் என்னுடைய மற்றும் பிரதிவாதியின் இடமும் இருக்கிறது.

பி பட்டிகை சொத்து எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்றால் 40 அடி வீதி இருக்கிறது. அந்த பி பட்டிகை சொத்தின் தெற்கு பக்கம்தான் எனது வீடு இருக்கிறது என்றால் சரிதான். 1 சென்ட் சொத்தின் தெற்கு பக்கம் எனது சொத்து இருக்கிறதா பிரதிவாதியின் சொத்து இருக்கிறதா என்றால் இரண்டு பேருக்கும் இருக்கிறது. எ பட்டிகை சொத்தின் விஸ்தீரணம் என்னவென்றால் எனக்கு தெரியாது. பி பட்டிகை சொத்தின் விஸ்தீரணம் என்னவென்றால் அதுவும் எனக்குத் தெரியாது. நான் EB யில் இன்ஞினியராக வேலை பார்த்து ஓய்வு பெற்றுள்ளேன். நான் பிஇ படித்துள்ளேன்.

எனது பிராதிலும் சத்தியபிரமாண வாக்குமூலத்திலும் பி பட்டிகையின் தெற்கு பக்கம் எனது சொத்து இருப்பதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் வீடு கட்டி 25 வருடங்கள் ஆகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ. 5 ல் இருக்கும் புகைப்படத்தின் கேட்டின் முன்பகுதிதான் பி பட்டிகை சொத்து என்றால் சரிதான். மேற்படி 1 சென்ட் சொத்து பி பட்டிகை சொத்தின் வடக்கு பக்கம் இருப்பதால் வா.சா.ஆ.5 ல் அது துலங்காது என்றால் சரியல்ல. பி பட்டிகை சொத்தின் வடக்கு

பக்கம் 1 சென்ட் சொத்து இருப்பதால் அதை மறைப்பதற்காக எனக்கு விஸ்தீரணம் தெரியாது என பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எ மற்றும் பி பட்டிகை சொத்தை காண்பிப்பதற்காக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் உள்ளது. நான் மாதிரி வரைபடம் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

எ பட்டிகை சொத்தின் 4 பக்க எல்கை. தெற்கு பக்கம் பிரதிவாதியின் இடம். கிழக்கு பக்கமும் பிரதிவாதியின் இடம். மேற்கு பக்கம் ஜாண் எட்வர்ட் என்பவரின் சொத்து. வடக்கு பக்கம் வில்சன் என்பவருடைய சொத்தும் பிரதிவாதி வாங்கிய 1 சென்ட் சொத்தும் உள்ளது. எனது பிராதில் எ பட்டிகை சொத்தின் வடக்கு பக்க எல்கையாக 1 சென்ட் சொத்தை காண்பித்துள்ளேனா என்றால் காட்டவில்லை.

பி பட்டிகை சொத்தின் நான்கு பக்க எல்கை வடக்கு பக்கம் ரோடு. முன்பு கேட்கும்போது வடக்கு பக்கம் 1 சென்ட் சொத்து என கூறிவிட்டு தற்போது வடக்கு பக்கம் ரோடு இருப்பதாக நான் கூறுவதில் எது சரியானது என்றால் வடக்கு பக்கம் ரோடு உள்ளது.

பி பட்டிகையின் வடக்கு பக்கம் பிரதிவாதியின் 1 சென்ட் சொத்து உரிமைப்பட்டது இருப்பதில் எந்த அவசாகமும் எழுதித்தராததால் அதை மறைக்கும் விதமாக எனது பிராது மனுவில் பி பட்டிகை சொத்திற்கு வடக்கு எல்கையாக 1 சென்டை காட்டாமல் ரோடு என பொய்யாக காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. அதனால்தான் நான் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி 1 சென்ட் சொத்தை பிரதிவாதி யாரிடமிருந்து விலைக்குவாங்கினார் என்றால் வில்சன் என்பவரிடமிருந்து விலைக்கு வாங்கினார். எனது சொத்தின் வடக்கு பக்கமும் வில்சனின் சொத்து உள்ளது என்றால் சரிதான்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.